உ
சிவமயம்



அமரர்

# திருமதி.விநாயகமூர்த்தி புனிதவதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# புனித மலர்

10.05.2006

ஓம் ஸ்ரீ சாயிராம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும்

கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட



அமரர்

# திருமதி.விநாயகமூர்த்தி புனிதவதி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# புனித மலர்

**10.05.2006**



# சமர்ப்பணம்

அறிவில் ஆற்றலில் சிறந்து
உள்ளத்தால் உயர்ந்து,
பல்லோரும் போற்ற வாழ்ந்து
கண்ணிறைந்த மனைவியாய்,
நல்லறிவூட்டிய தாயாய் நல் சகோதரியாய்
மதிப்புள்ள மாமியாய், மைத்துனியாய்,
பாட்டியாய் பெருமைக்குரியவராகத்
திகழ்ந்த எங்கள் தெய்வத்திற்கு
இம் மலரைச் சமர்ப்பணமாக்குகின்றோம்.

குடும்பத்தினர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில் — 15.12.1920

விண்ணில் — 10.04.2006

அமரர்

# திருமதி விநாயகமூர்த்தி புனிதவதி

அவர்கள்

திதி வெண்பா

பார்த்திப ஆண்டு படர் பங்குனித் திங்கள்
கூர்த்த திரயோதசி திதியையே - ஆர்க்கும்
அருமயிலை அன்னை புனிதவதி அம்மா
சடையோன்தாள் அடைந்த திதி.

# பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்
கோலஞ்செய் துங்கக் கரிமுகத்துத்
தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா

## தேவாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா
ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா
றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி
யாதன கண்டேன்.

# திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8-ஆம் திருமுறை)

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



# திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுக
சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

# திருப்புகழ்


நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபாந மோநம
ஞான பண்டித சாமீந மோநம வெகுகோடி
நாம சம்புகு மாராந மோநம
போக அந்தரி பாலாந மோநம
நாடக பந்தம யூராந மோநம பரசூர
சேத தண்டவீ நோதாந மோநம
கீத கிண்கிணி பாதாந மோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராச
தீப மங்கள சோதுந மோநம
தூய அம்பல லீலாந மோநம
தேவகுஞ்சரி பாகாந மோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராச கெம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கெண்டவ ரோடெமுன் நாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நல் நாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

ஏறுமயிலேறி விளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புனர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீ யருளல் வேண்டும்
ஆதியருணா சலம் அமைந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறை விலாதுயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





அம்மா தினமும் பாராயணம் செய்யும்
முருக ஸ்துதிகள்

## முருக வணக்கம்

உன்னை யொழிய
ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான்
பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர்
கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே.

அஞ்சு முகந்தோன்றின்
ஆறு முகந்தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில்
வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில்
இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார்முன்.

முருகனே செந்தி
முதல்வனே மாயோன்
மருகனே ஈசன்
மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய
தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

நக்கீரர் தாமுரைத்த
நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ்
சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து
மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாந் தரும்.

முருகனடி வெல்க

# கந்தர் சஷ்டி கவசம்

## செந்தில்மேவும் சரவணன்

### இரண்டாவது கவசம்



### காப்பு

*அமரர் இடர்தீர அமரம் புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி*

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம் நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் – கதித்(து) ஓங்கும் நிட்டையுங் கைகூடும்,
நிமலர் அருள்கந்தர் சஷ்டி கவசந்தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி



விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசரஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க



ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒரு தலை நோயும்



வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடனிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனென்னவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட்டாய் வாழ்வார்



கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுத னே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

நீலமயில் வீற்றிருக்கும் நேசன் திருவருளால்
ஞாலம் சிறக்கும் நனி

# கந்தரலங்காரம்

## காப்பு

அடல் அருணைத்திருக் கோபுரத்
　　தேயந்த வாயிலுக்கு
வடஅரு கிற்சென்று கண்டுகொண்
　　டேன்வரு வார்தலையில்
தடபடெ னப்படு சூட்டுடன்
　　சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக்கு
　　இளைய கனிற்றினையே.

## நூல்

பேற்றைத் தவஞ்சற்றும் இல்லாத
　　என்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட
　　வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத்
　　தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
　　குமாரன்க்ரு பாகரனே.

பெருமைபைம் புனத்தினுள் சிற்றேனல்
　　காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி
　　னால்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தத்
　　தித்தித்து அறிந்த அன்றே



கரும்புந் துவர்த்துச்செந் தேனும்
　　புளித்தறக் கைத்ததுவே
ஒளியில் விளைந்த உயர்ஞான
　　பூதரத்து உச்சியின்மேல்
அளியில் விளைந்ததொர் ஆனந்தத்
　　தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்
　　பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம்
　　ஆறுடைத் தேசிகனே.

தேனெறு பாகென்று உவமிக்கொணா
　　மொழித் தெய்வவள்ளி
கோனன்று எனக்குப் தேசித்தது
　　ஒன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று
　　நீரன்று மண்ணும் அன்று
தானன்று நானன்று அசரீரி
　　யன்று சரீரியன்றே.

வேதா கமசித்ர வேலா
　　யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக
　　அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே
　　ஒளித்துச்சம் மா இருக்கப்
போதா யினிமன மேதெரி
　　யாதொரு பூதர்க்குமே.
கோழிக் கொடியன் அடிபணி
　　யாமல் குவலயத்தே

வாழக் கருதும் மதியிலி
காள் உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்
டாதுங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு
மோநும் அடிப்பிறகே.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போல்
கைதா னிருபது உடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேல்படை வானவ
னேமற வேன் உனை நான்
ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு
ஓட்டி அதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே.

நீலச் சிகண்டியில் ஏறும்
பிரானெந்த நேரத்திலும்
கோலக் குறத்தி உடன்வரு
வான்குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி



வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப்
பார்வெறுங் கர்மிகளே.
பாலென் பதுமொழி பஞ்சென்
பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
நீ செந்தி லோன் திருக்கை
வேலென் கிலைகொற்ற மயூரம
தென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேஎங்ங
னேமுத்தி காண்பதுவே.

மூடியாப் பிறவிக் கடலில்
புகார்முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலம் அடங்கப்
பொடியாக் கியபெரு மாள் திரு
நாமம் புகல்பவரே.

நாளென் செயும்வினை தானென்
செயும்எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயும்குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

சேல்பட்டு அழிந்தது செந்தூர்
வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்
சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்ததிங் கென்தலை
மேலயன் கையெழுத்தே.

பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனமெற்றித்
தத்தித் கரைபுர ளும்புர
மானந்த சாகரத்தே.

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந்
துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர்
முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ்
சூரனும் மேருவுமே.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு



நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

செந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக்கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

படிக்கின் றிலைபழ நித்திரு
நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென
கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த
மேற்கொள் விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச
மேது நமக்கினியே.

பந்தாடு மங்கையர் செங்கயற்
பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தன்னைத் தீர்த்தருள்
வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ்
திருத்தணிக் குன்றினிற்குங்

கந்தா இளங்குமரா அம
ராவதி காவலனே.

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ
டனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேயந்த நான்முகனே.

கருமால் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வருமா குலவனை சேவற்கைக்
கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வே
லனைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலநன்றே.

மண்கம ழுந்தித் திருமால்
வலம்புரி ஓசையந்த
விண்கமழ் சோலையும் வாவியும்
கேட்டது வேலேடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திரு அரையில்
கிண்கிணி ஓசை பதினால்
உலகமுங் கேட்டதுவே.



இடுதலைச் சற்றுங் கருதேனைப்
போதமி லேனையன்பால்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட்
டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்
பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது
பாச வினைவிலங்கே.

**நூற் பயன்**

சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு
கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும்
யானைக்குங் கந்தன் நன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி
தான்கற் றறிந்தவரே.

**கல்வியின் இலக்கு**

◈ *அறிவு வளரும்போது அவாவும் வளருமானால் அதனால் பயனேதும் இல்லை. அது சொல்லில் ஒருவனைத் தலைவனாக்கும், செயல் பூச்சியம் தான்.*
(HERO IN WORDS- ZERO IN ACTION)

*பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# ஸ்ரீ ஸ்கந்தகுரு கவசம்

**ராகம் : நாட்டை**

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப்பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்
சித்தி வினாயக ஜயமருள் போற்றுகிறேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்தென்னை ரெக்ஷித்திடுவீரே

**ராகம்: நாட்டை**

ஸ்கந்த சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரண மடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத்தா னறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவிர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் விடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுரு நாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன்
புவனகுரு நாதா போற்றி போற்றி
ஸ்கந்தா போற்றி போற்றி போற்றி



முருகா போற்றி அறுமுகா போற்றி
அருட்பதம் அருள்வாய் தகப்பன் சாமியேஎன்
இதயத்துள் தங்கிடுவாய் ஸ்வாமி மலைதனில்
சொன்னதனைச் சொல்லிடுவாய்

**ராகம்: சகானா**

சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெலாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக ஸ்வாமி யுன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்ரஹித் திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்யஜோதி யானகந்தா
பரஞ்ஜோதி யுங்காட்டி பரிபூர்ண மாக்கிடுவாய்
திருமலை முருகாநீ திடஞான மருள்புரிவாய்
செல்வமுத்துக் குமரா மும்மல மகற்றிடுவாய்
அடிமுடி யறியவொணா அண்ணாமலையோனே
அண்ணாசலக் குமரா அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுகுடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகா நீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்துநீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்

ராகம்: கல்யாணி

திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானு பூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச் சிவ னாக்கிடுவாய்
குன்றக் குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா
வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே
வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்
கந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகாநீ மனத்தகத்துள் வந்திடுவீர்
கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றிகந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
ஆறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ் ஜோதியே அன்பெனக் கருள்வாயே



ராகம்: ஆனந்தபைரவி

படர்ந்த அன்பினைநீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒரு பொருள் அன்பேதான்
உள் ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஓமெனும் அருள் மந்திரம் என்றாய்
அன்பை உளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியன்நீ யாவர்க்கும் எளியன்நீ
யாவர்க்கும் வலியன்நீ யாவர்க்கு மானோய்நீ
உனக்கொரு கோயிலைஎன் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா
அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல்வெயில் நீர்நெருப்பு
மண்காற்று வானதிலும் பகைமையை அகற்றி
அபயமளித் திடுவீர் உணர்விலே ஒன்றிஎன்னை
நிர்மல மாக்கிடுவாய் யானென தற்றமெய்ஞ்
ஞானம தருள்வாய் நீ முக்திக்கு வித்தான முருகா கந்தா

ராகம்: கேதார கௌளம்

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகை புதல்வா
ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ

ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய்வந் தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனேநீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ
வந்திடப்பா காண்பன யாவுமாய்க்
கண்கண்ட தெய்வமாய் வேதச் சுடரோய்
மெய்கண்ட தெய்வமே மித்தையாம் இவ்வுலகை
மித்தையென் றறிந்திடச் செய் அபயம் அபயம் கந்தா
அபயமென் றலறுகிறேன் அமைதியை வேண்டி
அறுமுகவா வாவென்றேன் உன்துணை வேண்டினேன்
உமையவள் குமராகேள் அச்சம் அகற்றிடுவாய்
அமைதியைத் தந்திடுவாய் வேண்டிய துன்னருளே
அருள்வதுன் கடனேயாம் உன் அருளாலே உன்தாள்
வணங்கிட்டேன் அட்டமா சித்திகளை
அடியனுக் கருளிடப்பா அஜபை வழியிலே
அசையாம லிருத்திவிடு சித்தர்கள் போற்றிடும்
ஞானசித்தியும் தந்துவிடு சிவானந்தத் தேனில்
திளைத்திடவே செய்துவிடு அருள்ஒளிக் காட்சியை
அகத்துளே காட்டிவிடு அறிவை அறிந்திடும்
அவ்வருளையும் நீ தந்துவிடு அனுக்ரஹித் திடுவாய்
ஆதிகுரு நாதாகேள் ஸ்கந்த குருநாதா
ஸ்கந்த குருநாதா தத்துவம் மறந்து
தன்னையும் நான்மறந்து நல்லதும் கெட்டதும்
நானென்பதும் மறந்து பாவபுண்ணியத்தோடு
பரலோகம் மறந்திடச்செய் அருள்வெளி விட்டிவனை
அகலா திருத்திடுவாய் அடிமையைக் காத்திடுவாய்
ஆறுமுகக் கந்தகுரோ சித்தியிலே பெரிய



ஞானசித்தி நீ அருள சீக்கிரமே வருவாய்
சிவானந்தம் தருவாய் சிவானந்தம் தந்தருளி
சிவசித்த ராக்கிடுவாய் சிவனைப் போலென்னைச்
செய்திடுவ துன்கடனே சிவசத் குருநாதா
சிவசத் குருநாதா ஸ்கந்த குருநாதா
கதறுகிறேன் கேட்டிடுவாய் தாளினைப் பிடித்தேன்
தந்திடு வரமெனக்கு திருவருட் சக்தியைத்
தந்தாட் கொண்டிடுவாய் சத்ரு பகைவர்களை
ஷண்முகா ஒழித்திட்டு கிழக்குத் திசையிலிருந்து
க்ருபாகரா காப்பாற்றும் தென்கிழக்குத் திசையிலிருந்து
தீனபந்தோ காப்பாற்றும் தென்திசை யிலுமென்னைத்
திருவருளால் காப்பாற்றும் தென்மேற் கிலுமென்னைத்
திறலவேலால் காப்பாற்றும் மேற்குத் திக்கிலென்னை
மால்மருகா ரக்ஷிப்பாய் வடமேற் கிலுமென்னை
மயிலோன் ரக்ஷிப்பாய் வடக்கிலென்னைக் காப்பாற்ற
வந்திடுவீர் சத்குருவாய் வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே

**ராகம்: பீம்ப்ளாஸ்**

பத்துதிக்குத் தோறுமெனை பறந்துவந்து ரக்ஷிப்பாய்
என்சிகையையும் சிரசினையும் சிவகுரோ ரக்ஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்க ளிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிக ளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிக ளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்க ளிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டி னையும்தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் நயமுடன் காக்கட்டும்

பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்க ளிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
ஹ்ருதயத்தில் ஸ்கந்தன் இனிதுநிலைத் திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவையுடைக் குதத்தோடு
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால்விரல்களையும் பொருந்தும் உகிர் அனைத்தையுமே
உரோமத் வாரமெல்லாம் உமைபாலா ரக்ஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாம்ஸமென்பு மேதஸையும்

**ராகம்: மோஹனம்**

அறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்
என் அஹங்காரமுமகற்றி அறிவொளியா யிருந்தும்
முருகா வெனைக்காக்க வேல்கொண்டு வந்திடுவீர்
பாபத்தை பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம்க்லீம் என்றும்
க்லெஸம் ஸௌம் நமஹவென்று சேர்த்திட்டா நாள்தோறும்
ஓமிருந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத் தோடுநீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்திட்டால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்லவேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித்தல மாகுமப்பா



ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்குக் காலபய மில்லையடா
காலனை நீஜயிக்க கந்தனை பற்றிடடா
சொன்னபடி செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீஜபித்தே முக்தனு மாகிடடா
அக்ஷர லக்ஷமிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றொடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய்நீ
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதைநீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே
வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்குமத்தை விரைவாகப் பற்றிடலாம்
சுப்ரஹ் மண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்

**ராகம்: அடாணா**

நின்னையே நான்வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளேநீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறி வாகவேநீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா
பகுத்திறி வானகந்தன் பரங்குன்றில் இருக்கின்றாய்
பழனியில் நீயும் பழம் ஜோதி யானாய்நீ

பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளி பிரம்மமய மாக்கிடுவாய்
திருச்செந் தூரில்நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச்சோலையில் பரஞ்சோதி மயமானாய்
சுவாமி மலையிலே சிவசுவாமிக் கருளியநீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
ஸ்கந்த கிரியைநீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாஸ்ரம் ஜோதியே
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கிற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்துநீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரண மடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னரு ளாலேநான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரானகந்தா உன்னிலென்னைக்கரைத்திடப்பா

**ராகம்: சிம்மேந்திர மத்யமம்**

என்னி லுன்னைக்காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசித்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன்நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன்நான்
ஸ்கந்தாஉன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பெல்லாம் நின்னையே நினைந்திடச் செய்திடுவாய்
திருமுருகா வுன்னைத் திடமுற நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே



திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யா னந்தமதில்
நித்யா னந்தமே நின்னுரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தகுரு நாதாகேள்
மெய்ப்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச்செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித் திரியுங்களையுன் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங்க ளனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்.

**ராகம்: தன்யாஸி**

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டே னுன்மஹிமை
இக்கணமே வருவாய் என்ஸ்கந்த குருவேநீ
என்னைக் காத்திடவே எனக்குநீ அருளிடவே
அரைக் கணத்தில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ரஹ் மண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய்நீ
ஞான தண்டபாணியே என்னை ஞானபண்டித னாக்கிடுவாய்
அகத்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மய்மாக்கி ஆட்கொள்ளு வையப்பா

அன்பைஎன் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய்நீ
அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பொன்பாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்
அன்பே பிரமமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பேஎன் குருநானப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரேதான்
ஸ்கந்தாஸ் ரமத்தில் ஸ்கந்தகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ் ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள்குரு
எல்லை யில்லாத உன் இறைவெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உனையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்

**ராகம்: காம்போதி**

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே



நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம ரந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாகஎனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடிய ராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில்கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர்போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா கந்தகுரோ
மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னை மலைக்குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருனைச் சிவன்மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர்வாழப் பிரதிஷ்டித்தான்
புலிப்பாணி சித்தர்களால் புடை சூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர்க ளோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதைநான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

**ராகம்: ஹம்ஸானந்தி**

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்கு தேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்
கன்னிமார் ஓடையின் மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாஸ் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ

அயர்ச்சியை நீக்கிடுவாய்என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்ய ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமா னந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்
மால் மருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமாரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்தகுரு நாதா
பழம்நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவா வினன்குடியில் திருமுருகனானாயோ
குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க் குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலகமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள் செய்த அறுமுருகவா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள்செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்த குரோ

**ராகம்: பிலஹரி**

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்டகண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியேகேள்



நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்
முருகா முருகாவென்றேமுச் செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்
அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இல்லாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாஸ் ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவேநீ சத்தியமாய் நம்பிடப்பா

**ராகம்: சுப பந்து வராளி**

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுரு வேஸத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதை சொந்தமாக்கிக் கொண்டுநீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணியகலும் ப்ரம்மா னந்தமுண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்

மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடனே ஏத்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமேநீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைஸ் வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழைத்திடுவன்அறுகுபோல் வேரோடிடுவன்
வாழையடி வாழையைப்போல் வம்சம் அதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்கியமும் சர்வ மங்களமும் பெருகிடுமே.

**ராகம் கானடா**

ஸ்கந்த குருகவசமிதை கருத்திருத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம் பொருள் இன்பம் வீடு அதிசுலபமாய் கிட்டும்
ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா உளத்தோடு கந்தகுரு கவசம்தன்னை
சிரத்தா பக்தியுடன் சிவகுமரனை நினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவாய் கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்
ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ



கந்த குருகவசம்தனை ஓதுவதே தவமெனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை
துன்பம் அகன்றுவிடும் தொந்தரவு நீங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி ப்ரம்மநிஷ்டை யும்தந்து
காத்து ரக்ஷிக்கும் கந்தகுரு கவசமே.

**ராகம்: காபி**

கவலையை விட்டு நீ கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் சம்சயப் பேயோட்டும்
அஞ்ஞானமும் மகற்றி அருள்ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவன்

**ராகம்: மத்யமாவதி**

தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்
ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே
கந்தன் புகழ்பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்துநிதம் கண்டுய்ம்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்
ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும்
ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்
இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்

மூன்றுதர மோதின் முனனிற்பன் ஸ்கந்தகுரு
நான்முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினமோதி பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை தினமேத்தின் எல்லாம் வசமாகும்
எட்டுமுறை ஏத்தில் அட்டமா ஸித்திகிட்டும்
ஒன்பது தரமோதின் மரணபயமொழியும்
பத்துதர மேத்திநித்தம் பற்றறுத்து வாழ்வீரே
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசமோதி கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரை கைகளிலே நீளடுத்துக்
கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி
உச்சியிலும் தெளிந்து உட்கொண்டு விட்டால் உன்
சித்த மலம் ஒடுக்கும் சித்தசுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி யேறிடுவீர்
கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்.

**மாணவர் தர்மம்**

◈ *நீங்கள் ஆசிரியர் மீது அன்பும், பயபக்தியும் காட்டுதல் வேண்டும். மிக உன்னத குண இயல்புக்கு உங்களை அழைத்துச் செல்லும் முதலாவது படியாக அது அமையும்.*

*பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா*



# கந்தரந்தாதி

*திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச*
*துருவாவி னன்குடி வானார் பரங்குன் று சீரலைவாய்*
*திருவாவி னன்குடி யேரகங் குன்றதொ றாடல்சென்ற*
*திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே.*

**கருத்து:** (பார்வதி சமேதரான) பரமசிவனும், லக்ஷ்மீ சமேதனான திருமாலும் புகழ்கின்ற கீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக் கடவுளுக்கு உறைவிடமாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலைமலை இவ்வாறு தலங்களையுந் துதியுங்கள். 1

*செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு*
*செவிக்கன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்*
*செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்*
*செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே.*

**கருத்து:** நாகமலையில் வாழுங் கந்தசுவாமியே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக்கொடி என் ஆத்துமாவை அபயங்கொடுத்து ஆண்டுகொண்டது; உன் வேலாயுதம் பிறப்புக்கிடமான பேராசையை யொழித்துவிட்டது; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது. இனி யான் தேட வேண்டியது என்ன இருக்கின்றது? 2

*திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்*
*திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்*
*திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்*
*திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுந் திருத்துளமே.*

**கருத்து:** நித்தியமானவனே! சராசரங்களைப் படைத்தும், பரமகபாலமேந்தியும், ஆநந்த நடனஞ்செய்து கயிலாசத்திலுறைகின்ற பரமசிவனுக்கும், இமயமலையின் குமாரியாகிய பார்வதிக்கும் மைந்தனே! திருச்செந்திற் பதியோனே! என் உள்ளமானது குலாலன் சக்கரம் ஒருதரம் சுற்றுவதற்குள் அநேககோடிதரம் சுற்றி வருகின்றது; அதை யடக்கியருள வேண்டும் 3

*சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்*
*சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்*
*சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்*
*சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.*

**கருத்து:** கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகி பேரில் அன்புகூர்ந்த செந்தினாயகனே! அசுரர்குலாந்தகனே! சேந்தனே என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோதயத் தாலாகுந் தீமையில்லை. 4

*தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்*
*தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்*
*தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விற்றடவன்றாள்*
*தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே.*

**கருத்து:** பிரமாவே! இனி யென்னை யுதரநிறைந்த கருக்குழியில் அழுந்துவோரைப்போல் நினையாதே! இந்திரனது சிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாத தாமரையை யடையும் பொருட்டு அவனையே தியானித்துக் கொண்டிருக்கிறேனாதலால் எனது தலை உன் கையால் இனி எழுதப்படாது. 4

*சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்*
*சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்*
*சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா*
*சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே.*



**கருத்து:** ஏகவஸ்துவான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளி நாயகனே! மயிலேறும் வீரனே! மாவடிவாய் நின்ற சூரனை வென்ற வீரனே! நின் திருவருளின் பிரகாசத்தினால் எனது கோபமென்னும் மிருகம் பொறுமை யென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மையதாயிற்று. 6

*திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்*
*திறவா வனச முனியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்*
*திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்*
*திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே.*

**கருத்து:** கயிலாயத்தின் கதவு திறக்கும்படிச் செய்கின்றவனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்து பிரம்மாவையும் வென்றோனே! தெற்கின் கண்ணதாகிய திருச்செந்தூரில் வாழும் மயில் வாகனனே! என் அனித்திய காலத்தில் உனது தண்டை யணிந்த தாளே என் சிந்தையை வைக்கு மடைக்கல ஸ்தானமாம். 7

*சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்*
*சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்தினைமேற்*
*சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்*
*சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே.*

**கருத்து:** சிற்றுமியும் ஈயாமல் மரம்போன் றிருப்பவர்களே! நீங்கள் பிழைப்பதெப்படி? நீர் தும்முங்காலையிலாவது தினைப் புனத்தின்கண் வள்ளியம்மையினிடத்துத் தமது மரபையோதி நின்றவனும், கண்ணப்ப நாயனார் நிவேதித்த எச்சிலை இனிதாகக் கொண்ட பரமசிவன் மைந்தனுமாகிய கந்தஸ்வாமியின் திருவடியைக் கருதிக் குமரனே சரண மென்பீரானாற் பிழைப்பீர்கள். 8

# அமரர் குடும்பத்தினரின் நினைவலைகள்

## இசையூட்டி வளர்த்த அக்கா

சென்ற ஏப்றல் மாதம் 1ஆம் திகதி நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அப்போது எனது சகோதரி' சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் இருந்தார். தினமும் காலையிலும் மாலையிலும் சென்று பார்த்தேன். 5ஆம் திகதி நான் கொழும்புக்கு புறப்பட முன்னரும் போய்ப்பார்த்த போது என்னைப் போய்வரும்படி கூறினார். நானும் கொழும்புக்கு வந்துவிட்டேன். 10ஆம் திகதி அவர் காலமாகிவிட்டார் என்ற செய்தி கிடைத்ததும் மிகவும் ஆழ்ந்த கவலையுற்றோம். இவ்வளவு கெதியில் எங்களைவிட்டுப் பிரிந்துவிடுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

நான் பிறந்து நான்கு மாதங்களில் எனது தாயார் காலமாகிவிட்டார். அதன் பின் எனது மூன்று சகோதரிகளே என்னை வளர்த்தார்கள். இவர்களில் மூத்த சகோதரியையே நான் அம்மா என்று அழைத்து வந்தேன். நான் சிறு குழந்தையாக இருந்த போது இச்சகோதரிகளில் இளையவரான புனிதவதி என்பவரே என்னை ஏணையில் இட்டு ஆட்டி நித்திரையாக்குவார். அப்போதெல்லாம் சங்கீதப் பாட்டுக்களையே பாடுவார். எமது தந்தையாரும் இசையில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்ததால் அக்காலத்தில் எங்கள் வீட்டில் ஒரு கிறாமபோன் (Gramaphone) இருந்தது. பழம்பெரும் சங்கீத வித்துவான்களாகிய எஸ்.ஜீ.கிட்டப்பா (எவரனி), முரசி சுப்பிரமணிய ஐயர் (நகுமோமு) முதலியோரின் இசைத் தட்டுக்களும் வீட்டில் இருந்தன. அக்காவும் வாய்ப்பாட்டும், வயலினும் கற்றுக்கொண்டிருந்தார். என்னைத் தூங்கவைக்கும் போது அக்கா அதிகமாக "நகுமோமு" என்ற கீர்த்தனையையே பாடுவார். வேறு கீர்த்தனைகள் பாடத்தொடங்கினால் நான் "நகுமோ", "நகுமோ" என்று அழுவேனாம். இவை எல்லாம் நான் வளர்ந்த பின் வீட்டிலும் அயலிலும் இருந்தவர்கள் கூறியே எனக்குத் தெரியவந்தது. இப்படிச் சிறுவயதிலிருந்தே எனக்கு இசையார்வத்தை யூட்டியவர் இவரேயாவர்.

இவருக்கும் வைத்திய கலாநிதி நா.விநாயகமூர்த்தி என்பவருக்கும் திருமணம் நடந்தது. பிள்ளைகளும் பிறந்தனர். எனினும் இருவரும் என்னைத் தமது மூத்த பிள்ளையாகவே கவனித்துவந்தனர். 1946ஆம் ஆண்டு நான் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1950ஆம் ஆண்டு வெளியேறி ஆசிரியரானேன். 1955ஆம் ஆண்டு நான் விவாகம் செய்தேன். 1958ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அத்தான் காலமானார். அதன் பின் 1962ஆம் ஆண்டு நான் ஆசிரியத் தொழிலிருந்து இளைப்பாறி சட்டக்கல்லூரியில் சேர்ந்தேன். 1966ஆம் ஆண்டு சட்டத்தரணியாகி 1967ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றேன். 1968ஆம் ஆண்டு பங்குனி மாதம் எனது மனைவியாரும் இங்கிலாந்துக்கு வந்தார். நாமிருவரும் இங்கிலாந் திலிருந்த காலத்தில் எங்கள் இரு பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்தில் இவரே தன் பிள்ளைகளைப் போல் பார்த்து வந்தார். நாங்கள் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்து 1969ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாகக் கடமையாற்றத் தொடங்கினேன். நாங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாத காலங்களில் இவருடைய மூத்த மகன் ஸ்ரீசக்திவேல் என்பவரே அக்காவையும் பிள்ளைகளையும் பார்த்து வந்தார். அக்கா தன் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணைகளை முருகன் அருளால் அமைத்துக் கொடுத்தார். அவர்கள்

எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழ்வதைக் கண்டு அகமகிழ்ந்திருந்தார்.

இவர் தன் பிற்காலத்தில் பெரும்பாலும் மகன் ஸ்ரீமயூரனின் குடும்பத்தினருடன் கொழும்பிலேயே வாழ்ந்து வந்தார். இடையில் சில காலம் மகள் ஸ்ரீரஞ்ஜனியுடன் சென்னையில் இருந்தார். மிகுந்த இறைபக்தியுடையவராதலின் தென்னிந்தியாவிலுள்ள திருத்தலங் களுக்கும் புட்டபர்த்திக்கும் விஜயம்செய்துள்ளார். தனது இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தி லேயே வாழவேண்டுமென்ற அவாவினால் அங்கு சென்று சில மாதங்கள் தனது இளையமகளுடனேயே இருந்து தனது விருப்பத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

W.S.**செந்தில்நாதன்**

**கல்வியின் இலக்கு**

- *இன்றைய உலகை அழிவிலிருந்து காப்பாற்றி, சமாதானமும், சாந்தியும் ஏற்படுவதற்கு மனித மேம்பாட்டுக் கல்வி தான் ஒரே வழி என உலக கல்விமான்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*
- *கல்வி என்பது வாழ்க்கைக்காக. சீவியத்திற் காகவல்ல.*

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா



# புனித அன்னையின் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் !!

சைவமும் ,தமிழும் தழைத்தோங்கிய யாழ்ப்பாணத்தில் அமைந்த வண்ணார்பண்ணையில் அந்நாளில் புகழ் பூத்த வைத்திய குடும்பங்கள் மூன்று. சபாபதி செட்டியார் குடும்பம், டொக்காட் கந்தையா குடும்பம், கஸ்தூரி முத்துக்குமாரு குடும்பம். இக்குடும்பங்கள் யாவரும் உறவினர்களே.

இவ்வாறு புகழ் பூத்த குடும்பங்களில் மூத்தோராகிய சபாபதி செட்டியாரின் மூன்றாவது மகளாகும் பேறு புனிதவதி யாருக்குக் கிட்டியது. இவர் தனது கல்வியினை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் விபுலானந்த அடிகளிடம் கற்கும் பேறு பெற்றார்.

அடியேன் அம்மாவை இரண்டு வயதினில் இழந்த துர்ப்பாக்கிய நிலை. அன்னையின் இடத்தை நிரப்பி பாசத்தைக் கொட்டி வளர்த்து ஆளாக்கி, வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தாய் தான் 10.04.2006 அன்று அமரத்துவம் அடைந்த "புனிதவதித்தாயார்" என கண்ணீர் மல்க நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகின்றேன். அவர் தான் எனது கண்கண்ட தாய்.

பெயருக்கேற்ப அம்மா எப்பொழுதும் புனிதமாகவே இருப்பார். இறையுணர்வும், இரக்க சிந்தையும், தமிழர் தம் பண்பாடும் மிக்கவராக இல்லறத்தினை நல்லறமாக நடாத்தி வந்ததன் பயனாக ஸ்ரீமயூரன்,ஸ்ரீஜெகதேவி, ஸ்ரீரஞ்ஜனி என்ற மக்கட் செல்வங்களைப் பெற்றபோதும், அவர் என்மீது கொண்ட பாசம் சற்றும் குறைவடையவில்லை. இரண்டாம் உலக மகா யுத்த கால வேளையில், துணிப் பஞ்சம், பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்பட்ட நேரத்திலும் எனக்கு உடை. உணவில் எந்தக்குறையும் வராது பார்த்துக் கொண்ட அம்மாவின் பரோபகார சிந்தனை இன்னும் என் மனதில் பசுமையாக

வுள்ளது. அது மட்டுமல்ல அவர் ஒரு "சகலகலாவல்லவர்" என்றே கூறவேண்டும். அவர் தமது இளவயதில் பெற்றோரை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருக்கா விட்டால் ஓர் உயர்ந்து கல்விமானாக மிளிர்ந்திருப்பார்.

இயற்கையிலேயே கலை ஆர்வமும், அழகுணர்ச்சியும் கொண்டவர். ஓய்வு நேரங்களில் அம்மா ஹார்மோனியம் இசைத்தும், வயலின் இசைத்து கீர்த்தனங்கள் பாடுவதும் வழக்கம். தைப் பொங்கல் என்றால் வீடு முழுவதும் அழகான கோலங்களால் அலங்கரிப்பார். எனக்கு முதலில் "மாதர் மடப்பிடியும்" என்ற தேவாரத்தை பண்ணோடு பாடிக்காட்டி அது போல் பாட வைத்த பெருமையும் அவரையே சாரும். கர்நாடக சங்கீத மேதை எம்.எஸ்.சுப்புலஷ்மியின் பரம ரசிகை. அம்மா விரும்பிப் பாடும் "என்றைக்குச் சிவகிருபை வருமோ" என்ற கீர்த்தனையை ஹார்மோனியத்துடன் இசைத்துப்பாடும் பொழுது மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கலாம். இவ்வாறு ஊக்கமளித்தே மாமாவிற்கும் எனக்கும் இசையில் நாட்டத்தை ஏற்படுத்தினார் என்றால் மிகையாகாது. நான் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது "சுடர்" என்ற பத்திரிகையினை நடாத்தி வருகையில், பொங்கல் மலருக்கு "உமா" என்ற புனைப் பெயரில் கவிதையில் வாழ்த்துப்பாடி எனது எழுத்தார்வத்தை ஊக்குவித்தார்.

எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் ஆற்றல் இயற்கையில் அம்மாவிற்கு கைவந்த கலையாக அமைந்திருந்தது. அன்றைய காலத்தில் பெரியம்மா, மாமா எல்லோரையும் ஆதரித்துக் கூட்டுக் குடும்பத் தலைவியாக மிளிர்ந்தார். நிலா முற்றத்தில் எல்லோரும் ஒன்றாகக் கூடி இருந்து உணவு சாப்பிட்டது இன்றும் நினைக்கும் போது நெஞ்சம் நெகிழ்கின்றது. ஒரு காலத்தில் எம் எல்லோரது குல தெய்வமாக அமைந்த வைரவ சுவாமிக்கு பொங்கல் பொங்கியும், வடைமாலை சாத்தியும் மகிழ்வார் அம்மா.



இருபத்தி ஒரு வயதில் எமது தந்தையார் காலமானார். குடும்பத்தில் மூத்தவனான என்னை வழிநடத்தி, பொறுப்புள்ள மகனாகவும், குடும்பத் தலைவனாகவும், இன்று சமுதாயத்தில் ஒரு மதிப்புள்ள குடிமகனாகவும் ஆக்கிய பெருமை அம்மா விற்கே உரித்தாகும். எனக்கு லோகநாயகியைத் திருமணம் செய்து வைத்து "பிள்ளை" என மருமகளை அழைத்து மகிழ்ந்திருந்து, பின்னர் ஸ்ரீசிவகுமாரன், ஸ்ரீசிவசக்தி என்ற பேரப்பிள்ளைகள் கிடைக்கப் பெற்று மகிழ்வடைந்தார்.

முருகன் பால் அதீத பக்தியுள்ளவர். தினமும் அதிகாலை யில் எழுந்து பிராணாயாமம் செய்து கந்தர் சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி படித்துவிட்டுத்தான் மற்றய வேலைகளை ஆரம்பிப்பதை வழக்கமாகக் கொண்டவர். நெற்றியில் நீறணிந்து சிவநெறி நின்று புனித வாழ்வு வாழ்ந்தவர் அம்மா. இவ்வாறு புனிதமாய் வாழ்ந்த அம்மாவின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் நிறைவாழ்வு வாழ்கிறார்கள் என்ற மன மகிழ்வுடன் பூட்டப்பிள்ளைகளுட னும் கொஞ்சி விளையாடி பூரண வாழ்வு வாழ்ந்த புண்ணியவதி தான் புனிதவதி அம்மா. இத்தகைய பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதரிது.

அனைவருடனும் பாசத்துடனும், நேசத்துடனும் இறக்கும் வரை இன்முகத்தினளாய் வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட "அம்மா" சித்திரைப் புத்தாண்டில் எம் சிந்தைதனில் நிற்கவென்றோ - சித்தம் விரும்பிச் சென்றீர் உமது அன்பதனை எமக்களித்து.

அன்னாரின் பிரிவினைத்தாங்கி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**பாசமுள்ள மகன்,**
**ஸ்ரீசக்திவேல் .**

# எப்பிறப்பிலும் வேண்டும் நீங்களே என் அன்னையாய்

"தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பது பழமொழி.

என் பதினான்கு வயதிலேயே தந்தையை இழந்து விட்டதால் என்னைப் பொறுத்தவரை என் அம்மா தான் கோயில் அவர் சொல்தான் எனக்கு மந்திரம்.

அந்தக் காலத்தில் ஒரு பெண் ஆண்துணை இல்லாமல் தனியாக நின்று நான்கு பிள்ளைகளை படிக்க வைப்பது என்பது மிகவும் கஷ்டம். அந்தக் கஷ்டத்தில்கூட எங்களுக்கு எந்தக் குறையும் வைக்காமல் படிக்க வைத்தார். எங்களை அதிகாலையில் எழுப்பி பாடம் சொல்லிக் கொடுத்து, படிக்க வைப்பதிலிருந்து அவர் எங்களுக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை. இன்று நான் ஒரு நல்ல நிலையில் இருப்பதற்கு காரணம் அவர் அளித்த ஊக்கமும் காட்டிய அக்கறையும் தான்.

எந்தத் தாய்க்கும் தன் பிள்ளை எவ்வளவு பெரியவன் ஆனாலும் என்றும் சிறுபிள்ளைதான். அதுபோலவே எனது அம்மாவும் நான் வேலையில் இருந்து வர சற்று தாமதித்தாலும் வாசலில் வந்து நான் வரும் வரை காத்திருப்பார். எனக்கு ஒரு சிறு வியாதி என்றால் கூட அந்த வியாதி மாறும் வரை அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார். எப்பொழுதும் அவர் தன் நலன் பற்றி கருதியதே இல்லை. சதா சர்வகாலமும் தன்னை சுற்றியிருப்பவர்களின் நலன் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பார். இந்த மாதம் அவர் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் இருந்தபோது என்னை வந்து பார்த்து விட்டுத் போகும்படி கூறினார். அந்த வேளையில் கூட சுயநலம் இல்லை. தான் மகனைப் பார்க்கவேண்டும் என்று கேட்கவில்லை. தன்னை



மகன் பார்க்கமுடியாது போனால் மனம் வருந்துவார் என்றுதான் அப்படிக் கூறியுள்ளார். நானும் இரண்டு நாட்களில் வருவதாக சொன்னேன். நான் வருவதை கேள்வியுற்று எனக்காக ஒரு உருத்திரா அபிஷேக பூஜை ஒன்றை நல்லூரில் ஏற்பாடு செய்திருந்தார். அந்த கஷ்டமான சூழ்நிலையிலும் அவர் தன்னைப் பற்றி எண்ண வில்லை.

அம்மா!

நான் கடவுளை கண்டதில்லை நேரில்
கண்டேன் அவரை உங்களில்
சொர்க்கத்தை பார்த்ததில்லை நானும் நேரில்
கண்டேன் சொர்க்கத்தை உங்கள் காலடியில்
இனி எப்பிறப்பிலும் வேண்டும் நீங்களே என் தாயாக
அதை இறைவன் மறுத்தால் எனக்கு வேண்டாம்
இன்னொரு பிறப்பு என்பதே....

**உங்கள் பிரிவால் துயருறும் மகன்**
**ஸ்ரீ மயூரன்**

**ஆசிரியர் தர்மம்**

*எல்லாத் தொழில்களிலும் கற்பித்தல் தொழிலே அதிக பொறுப்பு வாய்ந்தது. இன்றைய இளம் சந்ததியினரை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரியது. அவ்வாறு செய்யும் போது பெறுமதி மிக்க நாளைய பிரஜைகள் உருவாக்கப்படுவர்.*

*பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# அன்பு அம்மா

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பது ஆன்றோர் வாக்கு. அந்தப் பொன்மொழிக்கு அமைய வாழ்ந்து காட்டி தனது 86ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார் அந்தத் தாய் எனும் தெய்வம்.

சிறு வயதிலேயே தமிழ்ப் புலமை மிக்கவராக விளங்கினார். அறிவும் ஆற்றலும் மிக்கவர். கண் பார்த்தால் கை செய்யும் என்பார்களே, அத்தகைய கைத்திறன் மிக்கவராக விளங்கினார்.

இத்தகைய சிறப்புக்களோடு, பெண்களுக்கே உரிய இலக்கணங்களோடு வளர்ந்த எங்கள் அம்மாவிற்கும் எனது தந்தையாராகிய வைத்திய கலாநிதி.நா.வினாயகமூர்த்தி அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது. இல்லறம் நடத்தினார். ஆயினும் விதியின் பயன் அந்த மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கை சிறிது காலமே நீடித்தது.

தந்தையாரின் மறைவின் பின்பு எமது தாயார் எமது பெரியண்ணாவினதும், அவரது தம்பியாரினதும் உறுதுணை யுடன் எங்கள் மூவரையும் நல்ல வழியில் கல்வி கற்பித்து நல்ல ஒரு நிலமைக்கு கொண்டு வந்தார்.

தனது பிள்ளைகளை ஊர் உலகம் போற்றும் படி எந்தக் குறையுமில்லாமல் உத்தமராக வளர்த்து ஆளாக்கியது மட்டு மல்லாமல் அவர்களது திருமண வாழ்க்கையும் சிறப்பாக அமையும் வண்ணம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுத்து மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்த வழிகோலினார். பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்வுற்றார். கர்நாடக இசையில் மிக்க ஆர்வமுடையவர்



எனது தாயார். அவரது மூத்த பேத்தியாகிய எனது மகள் (இசைப்பட்டதாரி) கொழும்பில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றிய சமயம் இலங்கை வானொலிச் சேவையால் நடாத்தப்பட்ட பவளவிழா கர்நாடக இசைப் போட்டியில் பங்கு பெற்ற வைத்து, பெரும் ஊக்கமளித்து அந்தப் போட்டியில் 2ஆம் பரிசிற்குரிய விருதைப் பெறுவதற்கு முக்கிய காரணமாக விளங்கினார்.

அந்த விருது அம்மம்மாவால் தனக்கு கிடைத்தது என்று மகள் அடிக்கடி கூறுவார். அம்மாவின் வாழ்க்கைக் காலப் பகுதிக்குள்ளே அவரது பேரப்பிள்ளைகளும் நல்ல வளமாக கல்விச் சிறப்போடு வாழ்ந்து கொண்டிருப்பது அவருக்கு நிச்சயம் மனநிறைவைக் கொடுத்திருக்கும். இவ்வாறு பூரணமான வாழ்க்கை வாழ்ந்து பூட்டப் பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து புனிதமாகிய எங்கள் அம்மா புனிதவதியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**அன்பு மகள்,**
**ஜெகதேவி வைரமுத்து.**

### கல்வியின் இலக்கு

◈ *நவீன கல்வி அறிவை விருத்தி செய்கிறது. திறன்களை வழங்குகிறது. ஆனால் நற்பண்புகளை வளர்க்க வில்லை.*

*பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# எனது தெய்வத்தாய்

முற்பிறப்பில் நான் செய்த நல்வினைப் பயனால் இறைவன் மனமிரங்கி என் அம்மாவை எனக்குத் தாயாகத் தேர்ந்தெடுத்து எனக்கருள்பாலித்தருளினார். உற்றார், உறவினர், மற்றும் அயலவர்கள் அன்புடனும், பாசத்தடனும் "புனிதம்" என்று அழைக்கும் "புனிதவதி"யை நான் தாயாக அடையப்பெற்றது நான் செய்த பாக்கியமே. ஏன் எனக்குக் கிடைத்த வற்றாத செல்வமென்றே கூறலாம்.

எனது தாயார் என்னைச் செல்லமாக வளர்த்திருந் தாலும், மிகுந்த கண்டிப்பானவர். எதிலும் அளவும், கட்டுப்பாடும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துவார். ஆசைகளை வளர்க்கக்கூடாது என்று அறிவுரை கூறுவார். ஆனால் சிறு பிராயத்தில் நான் பாடசாலைக்குப் போகும் போதும், வெளியிடங்களுக்குச் செல்லும் போதும் என்னை அலங்கரித்து அனுப்புவதில் ஆனந்தம் காண்பவர். எனது சிறுபிராயத்திலே தந்தையை இழந்த என்னையும் எனது சகோதரர்களையும் தாய்க்குத் தாயாய் தந்தைக்குத் தந்தையாயிருந்து முழுப்பொறுப்புக்களையும் தானேயேற்று எம்மை வழிநடத்தி ஆளாக்கியவர் எமது அன்புத் தாயார். இக்காலகட்டத்தில் எனது அன்பு மாமாவும், தாயாரின் சகோதரருமாகிய W.S.செந்தில்நாதனும் அவரது பாரியார் அவர்களும், எனது மூத்த சகோதரர் ஸ்ரீ சக்திவேல் அண்ணாவுமே அம்மாவிற்கு எல்லா வழிகளிலும் துணையாக இருந்து ஆதரவு நல்கியவர்கள். அவர்களின் கடமையுணர்வைப் பற்றி பிற்காலத்தில் எனது தாயார் எமக்குச் சொல்லிப் பெருமைப்படுவதுண்டு.

கல்வியறிவும் கட்டுப்பாடும், மிகுந்த தெய்வபக்தியும் நிறைந்தவராதலால் எதற்கும் சலனப்படாதவர். எல்லாம் நியதிப்படியே நடக்கும், நமது கடமைகளை நாம் நிறைவாக நிறைவேற்றவேண்டும் என்று கடமையே கண்ணாக இருப்பவர் என் அன்புத்தாய். பகட்டான உலகியல் விடையங்களில் சிறிதளவேனும் அக்கறை காட்டாதவர்.



தேவி சரஸ்வதியின் அனுகூலம் பெற்றதனால் கல்வி, இசை, வயலின், ஹார்மோனியம், தையற்கலை, சித்திரம், சமையல், கைவேலைப்பணிகள் போன்ற எல்லாக்கலைகளிலும் திறமை மிக்கவராக விளங்கினார். நாம் அறிந்த கலைகள் இவ்வையகம் அறிய என்ற கூற்றுப்படி எல்லாவற்றையும் ஆர்வமுள்ளவர்களுக்கு அலுக்காமல் பொறுமையுடன் சொல்லிக்கொடுப்பதில் அலாதி ஆனந்தமும். தன்நிறைவும் காண்பவர். உடைதைத்தாலென்ன, கோலம் போட்டால்லென்ன, உணவு, பலகாரங்கள் செய்தாலென்ன அம்மாவின் தரமும், சுவையும் ஒரு தனிரகம். அயலவர் சிலர் "சகலகலாவல்லி" என்று அம்மாவை அழைப்பதை நான் கேட்டிருக்கிறேன். இசைப்பிரியையான இவர் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் ரசிகையாவார். இவரிடம் ஆன்மீகம், சங்கீதம் சம்பந்தமாக எந்தக் கேள்வி எழுப்பினாலும் விளக்கத்துடன் பதில் கிடைக்கும். Chess விளையாட்டில் அதிக ஆர்வம் உள்ளவர். தனது தந்தையார் தான் தனக்கு இந்த விளையாட்டுக் கற்றுத் தந்தவர் என்று பெருமையுடன் சொல்லுவார். எனக்கும் எனது சகோதரர்களுக்கும் Chess விளையாடக் கற்றுத் தந்தது புத்திஜீவியான எமது தாயார்தான். இவர் வானொலி, தொலைக்காட்சி மூலம் வெளி வரும் சங்கீதக் கச்சேரிகள், ஆன்மீக சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கள் போன்றவற்றையும், பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் புட்டபர்த்தியில் நடாத்தும் நிகழ்வுகள், இவைதவிர மங்கையர் மஞ்சரி போன்ற விசேட மகளிர் நிகழ்வுகள் எல்லாம் நடைபெறவுள்ள நாள், நேரம் குறித்து வைத்து தவறாது பார்த்து மகிழ்வார்.

தந்தையை இழந்த தன் பிள்ளைகள் எக்காரணங் கொண்டும் நிலைதடுமாறக் கூடாது, எப்படியாவது நற் பிரஜைகளாக வேண்டும் என்பது தான் அவரது குறிக்கோள்.

அந்தத் திடமான சிந்தனையால், முருகப் பெருமானிடம் பாரத்தை போட்டு தானே தந்தை பாகமேற்று தந்தையில்லாக் குறைபோக்கினார். தந்தையின் மறைவினால் மனத்துயருற்ற வேளையில் "பாலமுருகன்" வடிவில் முருகப் பெருமான் காட்சி கொடுத்து மனத்திடத்தை ஏற்படுத்தினார் என்று எனக்கு அம்மா சொன்னது இன்றும் ஞாபகம். எமக்குச் செய்ய வேண்டிய கருமங்கள், கடமைகள் எல்லாம் சீராகச் செய்து பாசமுடன் எம்மை வளர்த்தார். நான் படிக்கும் காலத்தில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கலைப்' போட்டிகளில் பங்கேற்று வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் காலங்களில் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களின் குறிப்புக்களை மற்றைய மாணவர்களிடமிருந்து பார்த்து எழுதிக் கொடுத்து எனக்கு ஊக்கமளித்து என் உயர்வில் மனமகிழ்ந்து அன்னையாய், தந்தையாய், குருவாய் என்மனதில் உயர்வடைந்தவர் என் அம்மா.

சத்தியம், ஒழுக்கம், கடமை, கட்டுப்பாடு கடவுள் வழிபாடு என்றும் உன் வாழ்வில் நிலைத்திருக்க வேண்டுமென்றும், இவற்றை எச்சந்தர்ப்பத்திலும் தவறாது பின்பற்றவேண்டும் என்பதும் என் அருமைத்தாயின் கண்டிப்பான கட்டளையாகும்.

இந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்குச் சென்று இறைதரிசனம் செய்ய வேண்டும், என்ற ஆவல் அம்மாவின் அடிமனதில் இருந்து வந்தது. குடும்பத்தவர்கள் பலமுறை இந்தியாவிற்ச் சென்று வந்தாலும், அம்மாவிற்கு அவர்களுடன் போவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. முருகனின் அருளாலும், பகவான் பாபாவின் கருணையினாலும் 1989ஆம் ஆண்டு நானும் எனது கணவரும் அம்மாவை இந்தியாவிற்கு திருத்தல யாத்திரைக்காக அழைத்துச் சென்றோம். மிகுந்த சந்தோஷத்துடன் திருத்தலங்களைத் தரிசனம் செய்தார். குறிப்பாக முருகனின் ஆறுபடைவீடுகளையும், புட்டபர்த்தியில் பகவான் பாபாவையும் தரிசித்ததில் பெருமகிழ்ச்சி யடைந்தார்.



இதன் பின் நான் இந்தியாவில் இருந்த காலத்தில் இரண்டு வருடங்களுக்கு மேல் என்னுடன் தங்கியிருந்ததினால் பல திருத்தலங்களைப் பார்வையிட்டதோடு பலமுறை பாபாவையும் தரிசிக் கும் சந்தர்ப்பமும் அவருக்கு கிடைத்தது. மேலும் காஞ்சிமா முனிவரின் ஆசிகளையும் பெற்றார்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 80ஆவது அவதார வருடத்தினை முன்னிட்டு 10.12.2005 வெளிவந்த "80 Years of Love in Action" "80 வருட அன்பின் சேவை" என் ற மலரின் பதிப்பாசிரியராக கடமையாற்றினேன். அதில் பிரசுரிக்கப்பட்ட தமிழ் ஆக்கங்களை மிகவும் அவதானமாகவும், பொறுமை யாகவும் இறுதித் திருத்தங்களைச் செய்தவர் எனது அம்மாவே. சுத்தசைவ போசனத்துடன் தினமும் பிராணாயாமம், தியானம் என்பவை கிரமமாகச் செய்ததின் பலனே அம்மாவின் இறுதிக் காலத்திலும் அவரது புத்திக்கூர்மை சீராக இருந்ததற்கு காரணம் என நினைக்கின்றேன்.

முருகன் திருவருளால் சீரும் சிறப்பும் பெற்ற உயர்சைவ குலத்தில் பிறந்து, பெற்றோர் வழிபற்றி சமய அறிவு பெற்றதுடன், பின் தானும் பல நூல்கற்று, ஆன்மிக ஈடேற்றவழி நோக்கி தியானம், பிராணாயாமம், ஜெபம், நாமஸ்மரணை, என்று தினமும் நேரம் தவறாது கிரமமாகச் செய்து அந்த முருகனை தன் நெஞ்சத்திருத்தி செய்த ஆன்மீன இறை தொண்டின் பயனாக, அவர்தம் கடைநாள் இறு மூச்சு பிரியும் வரை "முருகா" "முருகா" என்ற ஓயாது உச்சரித்ததை நாம் காணும் பேறுபெற்றோம். அப்போது நான் அம்மா "முருகன்"வந்து விட்டாரா என்று கேட்டபோது ஆம் என்று மெதுவாகத் தலையசைத்தார். அதன்பின் என்னை மிக்அருகில் அழைத்து "உருவாய் அருவாய்" என்ற கந்தரநுபூதியையும், "இறவாத இன்ப அன்பு வேண்டும்" என்ற பெரியபுராணத்தையும் பாடும் படியும், பகவான் பாபாவின் திருநீற்றை வாயில் போடும்படியும் கூறினார். வாழ்நாள் முழுவதும் இடைவிடாது நாமஸ்மரணை செய்து தன் உயிர் பிரியும் வேளையிலும் இறைநாமத்துடன் சென்ற

தூய்மையான புனிதவதி அம்மாவிற்கு மகளாகப் பிறந்ததில் நான் பெருமை யடைகின்றேன்.

தனது பிள்ளைகளை வழிநடத்தி நற்பிரஜைகளாக்கி, நல்ல மருமக்களுடன் சீரான வாழ்வு வாழ்வதைப் பார்த்து மகிழ்ந்தார். கொழும்பில் தனது மகனின் குடும்பத்துடன் வசித்து பேரப்பிள்ளை களை அன்புடன் ஆதரித்து வளர்த்து, தனது இறுதிக்காலத்தில் தானாகவே என்னுடன் இருக்க விரும்பி யாழ் வந்து கோயில் தரிசனங்கள் பல செய்து ஆனந்தமாக இருக்கும் வேளையில் அவரை முருகன் அழைத்துக் கொண்டார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்திடம் சரணடைந்து விட்ட எமது அன்புத் தாயாரின் பாதங்களைச் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

**அன்னை இறுதி நேரத்தில் என்னைப் அழைத்துப் பாடச்சொல்லி கேட்ட பாடல்கள்**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய், உயிராய்க், கதியாய், விதியாய்க்,
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே!

**"லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து"**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அன்பு மகள்**
**ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன்**



# என்றும் மறவா பாட்டி

வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த உலகத்தில் இடம் ஏது வந்தவர் பிரிந்து சென்றவிட்டால் இந்த இழப்புக்கு ஈடு ஏது பாட்டி!

என்ற உறவு என் மனதில் பதிந்துவிட்டு சென்ற நினைவுகள் ஏராளம். ஒன்றா, இரண்டா அதை எழுத இந்தப் புத்தகம் போதாது.

எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் என்னுடனேயே இருந்த ஒருவர். நான் அவர் மீது வைத்திருந்த பாசத்தைவிட அவர் என் மீது வைத்திருந்த பாசம் தான் அதிகம். எனக்கு ஒரு சிறு தலைவலி என்றால் கூட அடிக்கடி தலைவலி மாறிவிட்டதா என்று கேட்டுக் கொண்டே இருப்பார். அண்மையில் அவர் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் இருந்த இறுதி நாள்கூட என்னைப் பார்த்து நீ சாப்பிட்டியா என்று கேட்டார்.

அவர் எனக்கு கற்றுக் கொடுத்த விடயங்கள் ஏராளம். சிறுவயதில் எனக்கு பாடம் சொல்லிக் கொடுத்தவர், Chess விளையாட சொல்லிக் கொடுத்தவர் அவர்தான். எனது தம்பி அடிக்கடி சொல்லுவார் பாட்டி தனக்கு முக்கியமாக Knight றை வைத்து chess விளையாடலாம் என்று சொல்லித் தந்தபடி யினால்தான் APPIT விரிவுரையாளர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் chess champion ஆக முடிந்தது என்று.

எப்பொழுதும் என்னுடனேயே இருந்து என்னை வழிநடத்திச் சென்றவர். இன்று உயிரோடில்லாவிடினும் அவர் தெய்வமாக இருந்து என்றும் என்னை வழிநடத்த வேண்டு கிறேன். அவர் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டும்.

**உங்களை என்றும் மறவா பேத்தி**
**உமையாள்**

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினது அருளுரையிலிருந்து மானிட சேவைக்கான வழிகள் சில...

1. அன்னதானம், வஸ்திரதானம் ஆகியவற்றை சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு கிடைக்க ஏற்பாடு செய்தல்.
2. இலவச உணவு மையங்களை அமைத்து, தேவையுள்ளவர்க்கு உதவி செய்தல்
3. வசதி குறைந்த குடும்பத்தினருக்கு **அம்ருத கலசம்** திட்டத்தை (உணவுப் பொருட்கள் அடங்கிய பைகள்) உருவாக்கி உதவுதல்.
4. ஏழைக் குடும்பங்களைத் தத்தெடுத்து அவர்களது வறுமையைப் போக்குவதற்கான, திட சங்கல்பத்தோடு படிப்படியாக திட்டங்களைத் தீட்டி அவர்களது ஏழ்மையை நீக்குதல்.
5. கிராம சேவைகள் செய்து, கிராமம் முழுவதுமே முன்னேற்றம் அடைவதற்கான வழி வகைகள் செய்தல்.
6. வீடற்றவர்களுக்கு, வசதியான மேற்கூரை அமைந்த வீடுகளைக் கட்டித் தருதல்.
7. முதியோர் இல்லங்களுக்கு அடிக்கடி சென்று அங்கு தங்க நேர்ந்திருக்கும் முதியோருக்கு உதவ வேண்டும்.
8. கிராமங்களில் சுத்தமாக வைக்கும் திட்டங்களை நாமே முதலில் செய்து, பிறகு கிராமத்தினரை அதில் ஈடுபடுத்தி, சுகாதாரத்தின் முக்கியத் துவத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்.
9. கிராம முன்னேற்றத்திற்காக, கிராமங்களை தத்தெடுக்க வேண்டும்.
10. மத சம்பந்தமான பண்டிகைகளின் போது, சேவை முகாம்கள் நடத்தி, சுகாதாரம், மருத்துவ வசதி ஆகியவற்றை செய்து, க்ஷேத்திராடனம் செய்ய வருவோருக்கு உதவியாக இருக்க வேண்டும்.
11. இளைய தலைமுறையினருக்காக தனிப்பட்ட முகாம்கள் நடத்தி, அவர்களை சேவை மற்றும் ஆன்மீகப் பாதைகளில் செல்ல வழிகாட்ட வேண்டும்.
12. இயற்கைப் பேரழிவு காலத்தில் எவ்வாறு செயல்படுவது என்று இளைய தலைமுறையினருக்கு கற்றுத்தர முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.
13. கிராமங்களில் இருப்போருக்கு வேலை வாய்ப்புத் தர சிறிய, கிராமத் தொழில் திட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தத் தொழில் திட்டத்தால் கிராமத்திலுள்ள பெண்டிர், தங்களது வீட்டு வேலை நேரம் போக மற்ற நேரங்களில் பணி செய்து, தங்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வழியினை உருவாக்க வேண்டும்.
14. கிராமங்களில் குடிநீர்க் கிணறுகளிலும், குடி தண்ணீர் எடுக்கப்படும் ஏரி, குளங்கள் ஆகியவற்றிலும் "குளோரினேஷன்" செய்து அந்த நீர் பாதுகாப்பான குடிநீராக மாற்றப்பட வேண்டும்.
15. தண்ணீரைச் சரியான முறையில் பயன்படுத்தவும், அது மட்டுமல்ல, மற்ற இயற்கைச் செல்வங்களையும் சரியான முறையில் உபயோகிக்கவும் அவர்களுக்கு மனித குல குண மேம்பாட்டுக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.
16. காடுகள் அழிந்து விடாமல் பாதுகாக்க, புதிய மரம் நடும் திட்டங்களையும் நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.
17. கிராமங்களில் அவரவர் தேவைகளை அறிய "சர்வே" செய்து, அவர்களுக்குத் தேவையானவற்றை சேவையாகச் செய்ய வேண்டும்.
18. சிறைச்சாலையில் பஜன், தியான வகுப்புகள் மற்றும் நல்ல குணம் போதிக்கும் சொற்பொழிவுகள் ஏற்படுத்தி சிறைக் கைதிகளும் மறுவாழ்வு பெற முயற்சி செய்ய வேண்டும்.
19. உடல் ஆரோக்கியத்தை பரிசோதித்து, அவர்களுக்குத் தேவையான, ஆரோக்கிய வழிமுறைகளை அன்புடன் சொல்லிக் கொடுத்து, நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டும்.
20. இலவச, ஹோமியோபதி, ஆயுர்வேதம், மற்றும் அலோபதி மருந்துகளை பாதுகாக்க சிறிய மருத்துவமனைகளை நிறுவி,

ஏழைகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட வேண்டும்.

21. ஸ்ரீ ஸத்யஸாயி சேவை நிறுவனங்கள் - ஸ்ரீலங்கா ஏற்பாடு செய்திருப்பது போல் மரிக்க இருக்கும் நோயாளிகளுக்கென வசதியாக ஹாஸ்பிடல்களை உருவாக்கலாம்.
22. மனம் பேதலித்தவர்க்கு, மருத்துவ முகாம் ஏற்படுத்தி மருந்துகள் தருவதுடன், அவர்களுடன் பேசி, அவர்களுக்குக் குறை ஏதும் இல்லை என ஊக்கமளித்து மறுவாழ்வு அளிக்கும் செயல், மிகப் புனிதமானது.
23. கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு, தவறாது தொடர்ந்து மருத்துவ ஆலோசனைகளும், ஊட்டச்சத்து மிக்க உணவு களும் எற்பாடு செய்ய வேண்டும்.
24. புகை பிடிப்பவர்களையும், போதை மருந்துக்கு அடிமையானவர்களையும் அவற்றின் பிடியிலிருந்து மீட்க விசேஷ மருத்துவ முகாம்கள் நடத்தப்படவேண்டும்.
25. மருத்துவ மனைகளுக்கச் சென்று, அவர்களுக்கு உங்கள் அன்பின் அடையாளமாக சிறிய பரிசுகளைத் தரலாம். அடக்கத்துடனும், அன்புடனும் செய்யும் இந்தச் சேவை நோயாளிகளுக்கு மகிழ்ச்சியைத் தரும். இவை பண்டிகை தினங்களாக இருந்தால் அவர்கள் மகிழ்ச்சி இரு மடங்காகும்.
26. இலவச கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தி கிராமப் புறங்களில் கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும்.
27. கிராமப்புறங்களில், நகர்புற குடிசை வாழ் மக்கள் நிறைந்த குப்பங்கள், மற்றும் பின்தங்கிய மாவட்டங்கள் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியிலிருந்து ஆரம்பித்து, அவர்கள் வாழ்க்கை முறைக்குத் தேவையான கல்வி கற்றுத்தர ஏற்பாடு செய்ய வேண்டும்.
28. ஏழைக் குழந்தைகளுக்கு இலவச டியூஷன் அல்லது Coaching Classes நடத்த வேண்டும்.
29. மனித குல குண மேம்பாட்டுக் கல்வி போதிக்க பாலவிகாஸ் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்



30. பள்ளி, மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்துப் பரிமாற்ற மாநாடுகள் மூலம் மனித குல குண மேம்பாடுகளைப் பற்றிய தகவல்களை அவர்களுக்கத் தர முடியும். அவர்கள் மூலம் நிறைய மாணவர்கள் பயனடை வார்கள்.
31. பல மதத்தினரையும் ஒன்று சேர்த்து நமது நம்பிக்கையும், இறைவனும் ஒன்றே என்ற உண்மையை ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திக் கோள்ள வழிவகை செய்ய வேண்டும்.
32. வக்கீல்கள், பேராசிரியர்கள், வியாபாரிகள், மருத்துவர்கள் எனத் தனித்தனியாக குழுக்களிடையே மனித குல குண மேம்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.
33. கண்காட்சிகள் ஏற்படுத்தி, அதில் பகவானின் அறிவுரை களையும், சமூக சேவையாற்ற வேண்டிய அவசியத்தையும் பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் பரவச் செய்ய வேண்டும். கிராம முன்னேற்றம், மனித குல குணமேம்பாடுகளான ஸத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை ஆகியவை சமுதாயத்திற்கு எத்தனை முக்கியமானவை என உணர வைக்க வேண்டும்.
34. ஸ்ரீ ஸத்ய ஸாயி பெற்றோர்களுக்கான திட்டத்தை விளக்க கண்காட்சிகளை ஏற்பாடு செய்து, அதன் மூலம் குழந்தை களுக்கு மனித குல குணமேம்பாட்டை எவ்வாறு சொல்லித் தருவது என்பதைப் போதிக்க வேண்டும்.
35. ஸ்ரீ ஸத்ய ஸாயி மனித குல குணமேம்பாட்டு மையங்களை உருவாக்கி அதன் மூலம் ஆசிரியர்கள் "Values" பற்றிப் பயிற்சி எடுத்துக் கொள்ள வழி செய்ய வேண்டும்.
36. உலக நன்மைக்காக யக்ஞங்களை நடத்த வேண்டும். அதில் முக்கியமாக வேதம் கற்காதவர்களை கற்க வைப்பது, வேதத்தின் மகிமையை அனைவரும் உணரச் செய்வது நமது நோக்கமாக இருக்க வேண்டும்.



# நன்றி நவிலல்



மீளாத்துயில் கொண்ட எமது குலவிளக்காகிய **வினாயகமூர்த்தி புனிதவதி அவர்கள்** 10.04.2006 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு எம்துயரத்தில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், அன்பர்களுக்கும் அத்துயரச் செய்தியை அறிந்து தூர தேசத்திலிருந்து தொலைபேசிகள் தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்த எம்பாசமுள்ளவர்களுக்கும், தக்க சமயத்தில் உதவிகள் செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும், நேரில் வந்து மரணச் சடங்கிலும் ஆத்ம சாந்திப் பூஜையிலும் கலந்து கொண்டவர்களுக்கும், சாயி பஜனையிலும் பங்குபற்றியோருக்கும், பரமன் புகழ் பாடிய அந்தணப் பெரியோருக்கும் கண்ணீர் அஞ்சலியை அச்சிட்டு வெளியிட்டோருக்கும், இம் மலரினை விரைவில் அழகுற அச்சிட்டுத் தந்த காிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

**நன்றி**



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



பதிப்பு : கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம், தொ.பே: 021 222 2717. 4590123